දත්ත ආරක්ෂණ අධිකාරිය
தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை
Data Protection Authority

1 First Floor, Block 5, BMICH, Bauddhaloka Mawatha, Colombo 07, Sri Lanka.
Tel: +94 (0)112697241, Email: info@dpa.gov.lk, Web: www.dpa.gov.lk

My No: DP தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சுற்றறிக்கை: இல. 01/2024

2024 செப்டம்பர் 13 ஆம் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்
அனைத்து ஆணைக்குழுக்களினதும் தலைவர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் தலைவர்கள்
அரசாங்க கம்பனிகளின் தலைவர்கள் மற்றும்
அரச வங்கிகளின் தவைலர்கள்

# தரவுப் பாதுகாப்பு அதிகாரசபைக்கான அறிமுகமும் பகிரங்கத் துறையில் 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரயோகமும்

## 1. பின்னணி

1.1 2022 மார்ச்சு 19 ஆம் திகதியன்று சட்டமாக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமானது ("PDPA") கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் தொலைத்தொடர்பாடலில் ஈடுபட்டுள்ள தரவுடன் தொடர்புபட்டோரின் தனிப்பட்ட தரவின் பாதூப்பை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறைகளுக்கு ஏற்பாடுசெய்வதோடு இச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒழுங்குறுத்துகை இணக்கப்பாட்டை உறுதிசெய்து, அதன் முன்னுரையில் (http://documents.gov.lk/files/act/2022/3/09-2022_E.pdf என்ற இணைப்பில் காணப்படுகின்றது) குறிப்பிடப்பட்டவாறு டிஜிட்டல் பொருளாதாரத்தில் வளர்ச்சிக்கும் புத்தாக்கத்திற்கும் வசதியளிப்பதற்குமான ஏற்பாடுகளைச் செய்கின்றது.

1.2 சட்டமானது "தனிப்பட்ட தரவின்" செயலாக்கத்தை ஒழுங்குபடுத்துகிறது. அதாவது இயற்கை ஆள் ஒருவரை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அடையாளம் காணக்கூடிய எந்தவொரு தகவலும் 'தரவுடன் தொடர்புபட்டோர்' என அறியப்படுகிறது. பகிரங்க அதிகாரங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் ஆகிய இரண்டும் சேவைகளை வழங்கும்போது எழுகின்ற ஏதாவது பாதகமான தாக்கங்களிலிருந்து 'தரவுடன் தொடர்புபட்டோரின்' தகவல்சார் பிரத்தியேகத்தன்மையை பாதுகாப்பதை இந்தச் சட்டம் உள்ளடக்குகின்றது. பிரஜைகள் மற்றும் பிரஜைகள் அல்லாதவர்கள் ஆகிய

இருவரினதும் தனிப்பட்ட தரவுகள் PDPA இன் கீழ் சமமாக பாதுகாக்கப்படுகின்றன. (‘தரவுடன் தொடர்புபட்டோர்களின்’ உரிமைகள் சட்டத்தின் பகுதி II இல் ஏற்பாடு செய்யப்படுகின்றது).

1.3 “பகிரங்க அதிகாரம்” என்பது ஒரு அமைச்சு, ஏதேனும் திணைக்களம் அல்லது மாகாண சபை, உள்ளுராட்சி அதிகாரசபை, நியதிச்சட்டசபை அல்லது எழுத்திலான சட்டத்தினால் தாபிக்கப்பட்ட எந்தவொரு நிறுவனம், அல்லது மாகாண சபையொன்றினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஒரு அமைச்சு, ஏதாவதொரு திணைக்களம் அல்லது ஏனைய அதிகாரசபை அல்லது நிறுவனம் என பொருள்படும். PDPA இனால் ஒழுங்குறுத்தப்படும் அமைப்புகள் "கட்டுப்பாட்டாளர்கள்" மற்றும் "செயன்முறைப்படுத்துநர்கள்", ஆவார்கள் என்பதோடு மேலும் தனிப்பட்ட தரவை செயல்முறையாக்குவதற்கான வழிமுறைகள் மற்றும் நோக்கங்களை முதன்மையாக தீர்மானிக்கும் அமைப்புகளான சட்டத்தின் பல பகுதிகளின் கீழ் "கட்டுப்பாட்டாளர்கள்” தொடர்பாக பல குறிப்பான விசேட சட்ட கடப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. மறுபுறத்தில், “செயன்முறைப்படுத்துநர்கள் " ஒரு கட்டுப்பாட்டாளர் சார்பாக சில தனிப்பட்ட தரவு செயன்முறை தொழிற்பாடுகளைச் செய்வதற்கு ஒரு கட்டுப்பாட்டாளரினால் ஒப்பந்தம் செய்யப்படுகின்றனர்.

1.4 PDPA ஆனது, இலங்கைக்குள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது இலங்கையில் உள்ள ஒரு நபர் அல்லது நிறுவனத்தால் தனிப்பட்ட தரவுகளின் செயலாக்கத்திற்கு பிராந்திய ரீதியாக ஏற்புடையதாக அமைவதோடு; மேலும் இலங்கைக்கு வெளியில் உள்ள ஒரு நபர் அல்லது நிறுவனம் குறிப்பாக இலங்கையில் உள்ள "தரவுடன் தொடர்புபட்டோருக்கான”" பொருட்கள் அல்லது சேவைகளை ஏற்பாடுசெய்வதற்கும் அல்லது இலங்கைக்குள் அவர்களின் நடத்தையை கண்காணித்தல் ஆகியவற்றுக்கும் நாட்டுக்குவெளியேயும் ஏற்புடைதாகவிருக்கும்.

1.5 PDPA இன் பிரிவு 3(1) இன் பிரகாரம், தரவுடன் தொடர்புபட்டோரின் தனிப்பட்ட தரவைப் பாதுகாத்தல் தொடர்பாகப் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுறுதல் வேண்டும். ஆயின், எவ்வாறாயினும், பகிரங்க அதிகாரசபையொன்று வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் ஆளப்படுகின்றவிடத்து, அத்தகைய எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தனிப்பட்ட தரவின் செயன்முறைப்படுத்தலை நிறைவேற்றுவது, தரவுடன் தொடர்புபட்டோரின் தனிப்பட்ட தரவைப் பாதுகாத்தல் இச்சட்டத்துடன் ஒத்திருக்கின்ற அளவுவரை அத்தகைய அதிகாரசபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

## 2. சட்டத்தை கட்டம் கட்டமாக வலுவுறுத்துதல்

2.1 PDPA மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் (குறிப்பு. 2023 ஜூலை 21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி இல 2341/59), மூலம் தொழில்நுட்ப அமைச்சரினால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு

வெளியிடப்பட்ட கட்டளையொன்றின் மூலம் சட்டத்தின் பகுதி V (தரவு பாதுகாப்பு அதிகாரசபை) தொழிற்பாட்டுக்கு வரும் திகதி 2023 ஜூலை 17 ஆம் திகதியாக நியமிக்கப்பட்டதோடு குறிப்பாக 'தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையின்' தலைவரும் பணிப்பாளர்கள் சபையும் 2023 ஆகஸ்ட்டில் நியமிக்கப்பட்டது.

2.2 மேலும், 2024 ஜனவரி 8 ஆம் திகதிய 2366/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி, PDPA இன் தொழிற்பாட்டிற்காக தொழில்நுட்ப அமைச்சரால் பின்வரும் திகதிகள்:

(அ) 2023 டிசம்பர் 1ஆம் திகதியன்று, மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பகுதிகள் VI (அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமும் பதவியினரும்), VIII (அதிகாரசபையின் நிதியம்), IX (நானாவிதமானவை) மற்றும் X (பொருள்கோடல்) ஆகியவற்றின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருவதாகவும் ; மற்றும்

(ஆ) 2025 மார்ச் 18 ஆம் திகதியன்று, மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பகுதிகள் I (தனிப்பட்ட தரவைச் செயல்முறைப்படுத்தல்), II (தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகள்), III (கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் செயன்முறைப்படுத்துநர்கள்) மற்றும் VII (தண்டனைகள்) ஆகியவற்றின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருவதாகவும், அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

2.3 ஆதலால், PDPA ஆனது 2025 மார்ச்சு 18 ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்து முழுமையாகச் தொழில்படுத்தப்பட்டு, வினைப்படுத்தப்படும். தமது பிரத்தியேகத்தன்மைக்கு பங்கம் விளைவிக்கதக்கதாக தமது தனிப்பட்ட தரவு சேகரிக்கப்பட்டு, சேமிக்கப்பட்டு, செயன்முறைப்படுத்தப்படுவதாக நம்புகின்ற பிரஜைகள் 2025 மார்ச்சு 18 ஆம் திகதிக்குப் பின்னர், தரவுப் பாதுகாப்பு அதிகாரசபைக்கு முறைப்பாடு செய்ய முடியும்.

2.4 மேலும், 'தேவையற்ற செய்திகளைப் பரப்புவதற்கான தனிப்பட்ட தரவைப் பயன்படுத்துதல்' தொடர்பான இந்தச் சட்டத்தின் பகுதி IV, குறித்த திகதி 2025 மார்ச்சு 18 ஆம் திகதிக்குப் பின்னரான ஒரு குறிப்பிட்ட திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என பிரகடனப்படுத்தப்படும்.

### 3. தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை (DPA)

3.1 தனிப்பட்ட தரவுகளின் செயன்முறைப்படுத்தல் தங்கியிருக்கும் எதிர்கால தரவுசார்ந்த டிஜிட்டல் சமூகத்தை வினைத்திறனுடன் முகாமைசெய்வதற்கு தேவையான ஒரு சுயாதீனமான தேசிய ஒழுங்குறுத்துகை பொறிமுறையொன்றின் உருவாக்கத்திற்கு இந்த சட்டம் வழிவகுக்கின்றது. இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையை முறையாக நிறுவுவதற்காக, 2023 ஆகஸ்ட்டில், அதிகாரசபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் சபையை சனாதிபதி நியமித்தார். PDPA இன் பிரிவு 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் நோக்கங்கள் பின்வருமாறு உள்ளன:

(அ) இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தனிப்பட்ட தரவுகளின் செயன்முறைப்படுத்தலை ஒழுங்குபடுத்துதல்;

(ஆ) பகிரங்க மற்றும் தனியார் துறையில் நடைமுறைகள் மற்றும் சேவைகளின் டிஜிட்டல் மயமாக்கலில் இருந்து எழும் எந்தவொரு பாதகமான தாக்கத்திலிருந்தும் தரவுடன் தொடர்புபட்டோரின் பிரத்தியேகத்தன்மையைப் பாதுகாத்தல்;

(இ) டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் தொடர்பாடல்களில் ஈடுபட்டுள்ள தரவுடன் தொடர்புபட்டோரின் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பொறிமுறைகளுக்கு ஏற்பாடு செய்தல்;

(ஈ) டிஜிட்டல் பொருளாதாரத்தில் வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்திற்கு வசதியளிப்பதற்காக இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒழுங்குறுத்துகை இணக்கப்பாட்டை உறுதி செய்தல்.

3.2 PDPA இன் பிரிவு 33, அதிகாரசபையின் கடமைகளையும் பணிகளையும் விரிவாக விவரிக்கிறது.

3.3 DPA ஆனது 2024 ஆம் ஆண்டின் 3ஆம் மற்றும் 4ஆம் காலாண்டுகளில், ஆலோசனைசார் அணுகுமுறையொன்றைப் பயன்படுத்தி, சட்டத்தை அமுல்படுத்துவதற்கான கொள்கைச் சட்டகம் மற்றும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை வடிவமைக்கவும், 2024 ஆம் ஆண்டின் 4 ஆம் காலாண்டு மற்றும் 2025 ஆம் ஆண்டின் 1 ஆம் காலாண்டு காலப்பகுதியில் இந்தக் கொள்கைகள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கவும் எதிர்பார்க்கிறது. சட்டத்தின் தத்துவங்களை பிரயோகிப்பதில் DPA இனால் வெளியிடப்பட எதிர்பார்க்கப்படும் ஒரு தொடர் தராதர விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் தொடர்பில் அவர்களால் செயன்முறைப்படுத்தப்படுகின்ற தனிப்பட்ட தரவின் அளவுகள் மற்றும் தன்மையைப் பொருட்படுத்தாது பின்வரும் தாக்கங்கள் தொடர்பில் அனைத்து பகிரங்க நிறுவனங்களினதும் தலைவர்களின் விசேட கவனம் ஈர்க்கப்படுகின்றது.

## 4. <u>பகிரங்க அதிகாரங்கள் மீதான PDPA இன் தாக்கங்கள்</u>

4.1 உள்ளக மற்றும் வெளியக தரவுகளின் தனிப்பட்ட தரவுகளின் கட்டுப்பாட்டாளர்களாக பல பகிரங்க நிறுவனங்கள் செயல்படுவதால், PDPA இன் ஏற்பாடுகளை செயல்வலுப்படுத்துவதற்கு பொருத்தமான தொழில்நுட்ப மற்றும் நிறுவனசார் நடவடிக்கைகள் நடைமுறையில் இருத்தல் வேண்டும். (உதா., மீறல்களைக் அடையாளங்கண்டு, கட்டுப்பாட்டாளருக்குத் தெரிவிக்கவும், குறியாக்கம் அல்லது பிற தகவல் பாதுகாப்பு நடவடிக்கைகளை வழங்குவதற்கும்).

4.2 ஆதலால், ஒரு ‘கட்டுப்பாட்டாளரின்’ திறனில் செயல்படும் அனைத்து பகிரங்க நிறுவனங்களும் PDPA இன் பகுதி I இன் கீழான செயல்முறையாக்க கடப்பாடுகளுக்கு இணங்க ‘தனிப்பட்ட தரவு’ சேகரிக்கப்பட்டு செயல்முறைப்படுத்தப்படும் என்பதை உறுதி செய்தல் வேண்டும். அவர்கள் சட்டமுறைானதன்மை (பிரிவு. 5), நோக்க குறிப்பீடு (பிரிவு. 6), நோக்க வரையறை (பிரிவு. 7), சரியானதன்மையை பேணுதல் (பிரிவு. 8), தக்கவைப்பு வரையறை (பிரிவு. 9), நேர்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மைக் கடப்பாடுகள் (பிரிவு 10) மற்றும் வெளிப்படைத்தன்மை (பிரிவு 11) தொடர்பான கடப்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும்.

(அ) அனைத்து பகிரங்க நிறுவனங்களும், பிரிவு 12 இன் கீழான ஒரு பயனுறுதிமிக்க *“தரவு பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம்”* ஊடாக மேற்படி கடப்பாடுகளுக்கு இணங்குவதற்கான பொறுப்புணர்வை உறுதி செய்ய வேண்டிய தேவை உள்ளது. இது PDPA இன் பகுதி II இன் கீழான தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளை பிரயோகிப்பதை வசதியளிப்பதையும் உள்ளடக்கும்.

(ஆ) பொருத்தமானதொரு “தரவு பாதுகாப்பு அலுவலரை” நியமிப்பது போன்ற பகுதி III இன் கீழ் உள்ள மேலதிக கடப்பாடுகள் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் கடைபிடிக்கப்பட வேண்டும் என்பதோடு (பிரிவு 20), தேவைப்படும் பட்சத்தில், PDPA பிரிவு 24ன் கீழான குறிப்பிட்ட தனிப்பட்ட தரவு செயன்முறைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான தரவு பாதுகாப்பு தாக்க மதிப்பீடுகளை மேற்கொள்ளலும் வேண்டும்.

(இ) கட்டுப்பாட்டாளர் ஒருவர் சார்பாக தனிப்பட்ட தரவைச் செயல்முறைப்படுத்தும் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒரு மூன்றாம் தரப்பு, PDPA இன் கீழ் "செயன்முறையாளர்" என அழைக்கப்படுவதோடு, இந்தச் சட்டத்திற்கு இணங்குவதை உறுதிசெய்ய கட்டுப்பாட்டாளருக்கு உதவுதல் வேண்டும்.

4.3 PDPA இன் பிரிவு 26 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, எல்லை தாண்டிய தரவு ஓட்டம் தொடர்பான அதன் ஏற்பாடுகள் தொடர்பிலும் உங்களது விசேட கவனம் ஈர்க்கப்படுகின்றது. கிளவுட் சேவை வழங்குநர்களின் (CSPs) உதவியுடன் மூன்றாம் நாடொன்றில் தனிப்பட்ட தரவை செயல்முறைப்படுத்தும் நோக்கத்திற்காக இலங்கையின் ஆட்புலத்திற்கு வெளியே தனிப்பட்ட தரவுகளை நகர்த்துவது தொடர்பில் அது அக்கறைசெலுத்துகின்றது. தனிப்பட்ட தரவு உட்பட தரவு முகாமைத்துவத்திற்கான கிளவுட் சேவைகளைப் பயன்படுத்துவதுடன் இணைந்த அரசாங்கக் கொள்கைகள் அத்துடன் பொருத்தமான தரவு பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகயளுடன் CSPகள் இணங்குகின்றன என்பதை தயவுசெய்து உறுதிப்படுத்தவும். அரசாங்கத்திற்குச் சொந்தமான வணிக நிறுவனங்களாகச் செயல்படும் சில நிறுவனங்கள் ‘பகிரங்க அதிகாரம்’ என்ற வகுதிக்குள் இடம்பெறாமல் இருக்கமுடியும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

4.4 PDPA இன் ஏற்பாடுகளுடன் இணங்கிச்செல்வதை உறுதிப்படுத்துவதற்கு முடிந்தவரை அனைத்து நிறுவனங்கள் மற்றும் துறைகளின் செயல்சார்ந்த ஈடுபாட்டின்

முக்கியத்துவத்தை DPA உணர்ந்துள்ளது. அதன்பிரகாரம், PDPA இனால் அனுமதிக்கப்பட்டுள்ள அளவில், நிதி மற்றும் வங்கித்துறை, காப்புறுதி, சுகாதாரம், தொலைத்தொடர்பாடல்கள், சிவில் பதிவு மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் தனிப்பட்ட தரவுகளின் சேகரிப்பு மற்றும் செயல்முறையாக்கத்துடன் தொடர்பான பிரதான துறைகள்/வகுதிகளின் பிரதிநிதிகளுடன் ஏனைய நடைமுறைசார் சூழ்நிலைகள் குறித்து ஒரு ஒழுங்குமுறையான கலந்துரையாடலை பேணிவர DPA எதிர்பார்ப்பதோடு தொடர்புடைய ஆலோசனைக் குழுக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை செயல்படுத்துவதற்கான தயார்நிலையை மேம்படுத்துவதற்கான சூழிநிலை உருவாக்கப்படவேண்டும்.

4.5 மேலும், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (SLIDA) மற்றும் தனியார் துறையின் தன்னார்வ தொண்டர்களினால் அரசாங்க அலுவலர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் உயர்தர சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும். PDPA இல் குறித்துரைக்கப்பட்டுள்ள தொடர்புடைய முகாமைத்துவ அம்சங்கள் அதேபோல் மேற்குறிப்பிடப்பட்ட சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் மேலதிக விளக்கங்களை வழங்குவதற்கு 2024 ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் இருந்து ஆரம்பிக்கும் விழிப்புணர்வூட்டல் தொடர்களும் அதைத் தொடர்ந்து இந்த அதிகாரசபையினால் அறிவிக்கப்படும் ஒழுங்குறுத்துகை சட்டகம் என்பனவற்றுக்கு திணைக்களங்களின் தலைவர்கள், சட்ட அலுவலர்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் மனித வள முகாமைத்துவ அலுவலர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஒவ்வொரு நிறுவனத்தினதும் பிரதான அலுவலர்களுக்கும் ஏற்பாடுசெய்யப்படும்.

4.6 PDPA இன் ஏற்பாடுகளுடன் இணங்கிச்செல்வதற்கான நடவடிக்கைகளைத் ஆரம்பிப்பதற்காக வேண்டி தொடர்புடைய பணிப்புரைகள் / அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு உங்கள் நோக்கெல்லையின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் தயவுசெய்து அறிவிக்கவும். அத்தகைய செயல்பாடுகள் எவற்றை உள்ளடக்குகின்றன என்பதற்கான விளக்கமொன்று, உங்களது இலகுவான தொடர்புக்காக இந்த சுற்றறிக்கையின் இணைப்பு 1 இல் தரப்படுகின்றது.

4.7 அனைத்து முக்கிய தகவல்களும் தொடர்புடைய சட்ட சாதனங்களும் தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (URL: www.dpa.gov.lk) வெளியிடப்படும். DPA ஐ அதன் மின்னஞ்சல் முகவரி மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்: info@dpa.gov.lk

**(ஒப்பம்)**
**அர்ஜுன ஹேரத்**
**தலைவர்**
**தரவு பாதுகாப்பு அதிகாரசபை**

__பிரதி__

1. சனாதிபதியின் செயலாளர் - தகவலுக்காகவும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும்
2. பிரதம அமைச்சரின் செயலாளர் - - அதே-
3. அமைச்சரவையின் செயலாளர் - - அதே-
4. பாராளுமன்ற செயலாளர் நாயகம் - - அதே-

# இணைப்பு 1 – PDPA உடன் இணங்கிச்செல்லல்: ஆரம்ப படிமுறைகள்

**PDPA இணங்கிச்செல்லலை உறுதிப்படுத்துவதற்கான ஆரம்ப படிமுறைகள்**

**(1) விழிப்புணர்வூட்டல்:**
PDPA இன் கீழான ஏற்பாடுகள் மற்றும் நேரொத்த இணக்க தேவைப்பாடுகள் பற்றி அனைத்து பதவியினரும் அறிந்திருக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவும்.

**(2) ஆளுகை கட்டமைப்பு:**
PDPA இணக்கப்பாட்டை மேற்பார்வை செய்வதற்காக ஒரு DPO, தனிப்பட்ட வெற்றியாளர்கள் அத்துடன் /அல்லது உள்ளக நெறிப்படுத்தும் குழு ஆகியவற்றினால் நியமிக்கப்பட்ட ஒரு உள்ளக ஆளுகை கட்டமைப்பொன்றை அமைத்தல்

**(3) தனிப்பட்ட தரவு கணக்காய்வு:**
நீங்கள் எவ்வாறான தனிப்பட்ட தகவல்களை வைத்திருக்கின்றீர்கள், அதை எங்கிருந்து பெற்றீர்கள், அதை யாருடன் நீங்கள் பகிர்ந்துகொள்கின்றீர்கள், அதை நீங்கள் ஏன் வைத்தக்கொள்கின்றீர்கள் மற்றும் அதோடு சம்பந்தப்பட்ட செயன்முறைகள் பற்றிய ஆவணம்.

**(4) இடைவெளி மதிப்பீடு:**
உங்களது தற்போதைய செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் PDPA என்ன தேவைப்படுகின்றது என்பவற்றுக்கிடையிலான இடைவெளிகளை உறுதிப்படுத்திக்கொள்க. இடைவெளிகளை நீக்குவதற்கு நிவாரண திட்டத்தை வடிவமைக்கவும்.

**(5) கொள்கை அமுலாக்கம்:**
இணக்கப்பாட்டு தேவைகளை பூர்த்திசெய்வதற்காக நிறுவனத்திற்கான (உதா, தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகள், தரவு வைத்திருத்தல், பிரத்தியேக அறிவித்தல்கள், இணக்க முகாமைத்துவ பயிற்சி என்பவற்றுக்கு பதிலளித்தல்,) பொருத்தமான தரவு பாதுகாப்பு கொள்கைகளை வடிவமைத்து, அமுல்படுத்துதல்

**பயிற்சி மற்றும் திறன் கட்டியெழுப்புகை:**
PDPA வரையறுக்கின்ற இணக்கப்பாட்டு தேவைகளை பதவியினர் புரிந்துகொண்டு இணங்குகின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதும் தொடர்ந்துசெல்லும் அடிப்படையில் தேவையான தொழிநுட்ப ஆற்றல்களை விருத்திசெய்தலும்.